# TNRBA

# திருமண வரன் சேவை மையத்தின் வளர்ச்சி பாதை

TNRBA NEWS LETTER - EDITION 14

(Community Internal Circulation Only)

TAMILNADU RAJPUT BONDIL ASSOCIATION

Reg.No.10/2019

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு வணக்கம்

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் சார்பாக நடந்து வரும் திருமண வரன் சேவை மையத்தில் பதிவு செய்தோரின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்து விட்டது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். இராஜ்புத் பொந்தில் சொந்தங்கள் சங்கத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், கொடுத்து வரும் ஆதரவுமே இந்த மகத்தான சாதனைக்கு காரணம்.

திருமண வரன் சேவைகள் தொய்வின்றி நடைபெற ஊக்கமும், ஆதரவும் அளித்து வரும் TNRBA மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களுக்கும், மின் இதழ் தயாரிப்பிற்கு உதவி வரும், புதுக்கோட்டை திரு.V.ரவிசந்தர் சிங் அவர்களுக்கும், திருநெல்வேலி திரு.N.பிரேமானந்தா சிங் அவர்களுக்கும் இந்த தருணத்தில் நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த மின் இதழ் அச்சு சரிபார்பிற்கு உதவிய சென்னை கொளத்தூரை சேர்ந்த திரு.B.K.பாலாஜி சிங் அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த சமுதாய சாதனை நிகழ்வு தொடர் உழைப்பின் பலனாக பல்வேறு கட்ட வளர்ச்சிக்குப் பின்னர் அடைந்துள்ளோம். அதனை சுருக்கமாக நினைவு கூர்ந்து தங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெருமை கொண்டு இந்த திருமண வரன் சேவையை பற்றிய தொகுப்பை TNRBA செய்திமடலின் 14ஆம் பதிப்பாக வெளியிடுகிறோம்.

நன்றி, வணக்கம்.



**J.பிரகாஷ் சிங்**
**TNRBA மாநில பொது செயலாளர்,**
**இயக்குநர் மின் இதழ் நிர்வாக குழு**

# GREETINGS

Happy to note that, matrimonial registration in TNRBA Matrimonial Assistant Centre is touched the magic number of Thousand. This achievement is result of Rajput Bondil Community member's Trust and Faith on TNRBA.

Our transparent way of working, selfishness service and hard working of TNRBA Matrimonial Assistant Centre Executive Team has made this achievements possible.

Hundres of marriages are getting fixed through our TNRBA matrimonial service. Our services are appreciated not only in Tamil Nadu, but also in Karnataka, Andhra, Telangana & Kerala states.

My heartfelt congratulations to Shri.J.Prakash Singh who is the prime mover of this matrimonial service and his supporting team members Shri.N.Premanantha Singh and Shri.V.Ravichandar Singh. I am wishing them best of luck for their further milestones success.

My sincere thanks to Shri.N.Premanantha Singh and Shri.B.K. Balaji Singh for their contribution on publishing this TNRBA News Letter (Edition 14)

I am appealing all Rajput Bondil Community members to make use of this free matrimonial service and get the maximum benefit.

Thanks & Warm Regards,



**Dr.G.Bhavani Singh**
TNRBA State President
Founder Welfare Trust
Hosur



# திருமண வரன் சேவை மையத்தின் வளர்ச்சி பாதை

**1K Registrations**

1). ஆரம்ப காலத்தில் பல் வேறு வாட்ஸப் குழுக்கள் வாயிலாக பலரும் வரன் விபரங்களை பகிர்ந்து சேவை புரிந்து வந்தார்கள்.

2). சங்கத்தின் சார்பாக "கல்யாண கேந்திரா" மூலம் வரன் சேவைகள் ஆண்டுக்கு ஒருமுறை வழங்கப்பட்டது.

3). வரன் சேவைகளை துரித படுத்தவும், செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும், மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் "திருமண தகவல் மின் இதழ்" 07.07.2021 அன்று துவங்கப்பட்டது.

4). மின் இதழ் வரன் பதிவுகளை பெறவும், வரன் சேவை சம்பந்தப்பட்ட தகவல்களை தெரிவிப்பதற்கும் "திருமண வரன்கள் (TNRBA MATRIMONIAL) வாட்ஸப் குழு" 27.06.2022 அன்று துவங்கப்பட்டது. படிப்படியாக பிற வரன் சேவை வாட்ஸப் குழுக்கள் நிறுத்தப்பட்டு "திருமண வரன்கள் (TNRBA MATRIMONIAL) வாட்ஸப் குழு" ஒருங்கிணைந்த குழுவாக செயல்பட துவங்கியது.

5). ஒளிவு மறைவற்ற வரன் சேவை வழங்கும் பொருட்டு, "திருமண வரன் பதிவு கொள்கைகள்" வகுக்கப்பட்டு அவைகள் 01.01.2025 அன்று வெளியிடப்பட்டது.

6). மின் இதழ் தயாரிப்புக்கு ஆண்டு கட்டணங்கள் செலுத்தி உரிமம் பெற்ற மைக்ரோசாப்ட் (MICROSOFT PUBLISHER), புகைப்படங்கள் எடிட் செய்வதற்கு B612 (SNOW CORPORATION) போன்ற மென்பொருள்கள் பயன்படுத்த படுகின்றன.

7). திருமண வரன் தகவல் மின் இதழ் நிர்வாக குழு உறுப்பினர்கள் எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் சேவை மனப்பான்மையுடன் தங்களின் நேரத்தை அர்ப்பணித்து வருகிறார்கள்.

8). சொந்தங்கள் திருமண வரன் சேவை வளர்ச்சிக்காக அறக்கட்டளைக்கு வழங்கும் நன்கொடைகள் மூலம் திருமண வரன் சேவையை அனைவருக்கும் இலவசமாக வழங்க முடிகிறது.

9). திருமண வரன் பதிவின் போதும், நிச்சயதார்த்தம் அல்லது திருமணங்கள் போதும் இயன்ற நன்கொடைகளை மணமக்கள் வீட்டார்கள் அறக்கட்டளை மூலம் வழங்கினால், வரன் சேவையின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல இயலும்.


10). மின் இதழ் வெளியீடு நிகழ்வுகளை உங்கள் நினைவிற்கு பகிர்கிறோம்.

நன்றி, வணக்கம்.

திருமண வரன் தகவல் நிர்வாக குழு

# திருமண வரன் சேவை மையத்தின் வளர்ச்சி பாதை

1K Registrations





1 Edition

Matrimonial E.Magazine released as sublimentry book of TNRBA News Letter

திருமண வரன் தகவல் மின் இதழின் முதல் பதிப்பு, TNRBA செய்தி மடல் 2-ஆம் பதிப்பின் இணைப்பிதழாக வெளியிடப்பட்டது.

2 Edition

Matrimonial E.Magazine released on Rani Bai's 307th Memorial Day at Ranipettai
Date: 09.10.2021






திருமண வரன் தகவல்
மின் இதழின் 2-ஆம் பதிப்பு,
இராணி பாயின் 307வது நினைவு
தினமன்று இராணிப்பேட்டையில்
வெளியிடப்பட்டது.

3
Edition

Matrimonial E.Magazine released on Pongal Festival Day
Date: 14.01.2022

திருமண வரன் தகவல்
மின் இதழின் 3-ஆம் பதிப்பு,,
பொங்கல் தினத்தன்று
வெளியிடப்பட்டது.







4
Edition

Matrimonial E.Magazine released on Tamil New Year Day
Date: 14.04.2022

திருமண வரன் தகவல் மின்
இதழின் 4ஆம் பதிப்பு,
தமிழ் புத்தாண்டு தினத்தன்று
வெளியிடப்பட்டது.

5
Edition

Matrimonial E.Magazine released on
Date: 27.06.2022

திருமண வரன் தகவல்
மின் இதழின் 5ஆம் பதிப்பு,
ஜூன் 27ஆம் தேதி
வெளியிடப்பட்டது.






6
Edition

**Matrimonial E.Magazine released on Family Meet Gathering Function at Hosur on Date: 18.09.2022**

திருமண தகவல் மின் இதழ் பதிப்பு - 6, ஓசூர் குடும்ப விழாவில் வெளியிடப்பட்டது.



7
Edition

**Matrimonial E.Magazine released on Date: 18.12.2022**

திருமண வரன் தகவல் மின் இதழின் 7ஆம் பதிப்பு, டிசம்பர் 18ஆம் தேதி வெளியிடப்பட்டது.






8
Edition

**Matrimonial E.Magazine released on Marriage Function at Dharmapuri**

திருமண தகவல் மின் இதழ் பதிப்பு - 8, தருமபுரி திருமண நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது

**Date: 22.04.2023**



9
Edition

**Matrimonial E.Magazine released on Family Meet Gathering Function at Hosur**

திருமண தகவல் மின் இதழ் பதிப்பு - 9, ஓசூர் குடும்ப விழாவில் வெளியிடப்பட்டது

**Date: 30.07.2023**






10
Edition

**Matrimonial E.Magazine released on**

**Date: 29.10.2023**

திருமண வரன் தகவல் மின் இதழின் 10ஆம் பதிப்பு, அக்டோபர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டது.







11
Edition

**Matrimonial E.Magazine released on**

**Date: 26.02.2024**

திருமண வரன் தகவல் மின் இதழின் 11ஆம் பதிப்பு, பிப்ரவரி 26 ஆம் தேதி வெளியிடப்பட்டது.

12
Edition

**Matrimonial E.Magazine released on Tamil New Year Day Date: 14.04.2024**

திருமண வரன் தகவல் மின் இதழின் 12ஆம் பதிப்பு, தமிழ் புத்தாண்டு அன்று வெளியிடப்பட்டது.







13
Edition

**Matrimonial E.Magazine released during Family Meet Gathering Function at Hosur Date: 18.08.2024**

திருமண தகவல் மின் இதழ் பதிப்பு - 13, ஓசூர் குடும்ப விழாவில் வெளியிடப்பட்டது.






14
Edition

Matrimonial E.Magazine
released on Gandhi Jeyanthi
Date: 02.10.2024

திருமண தகவல் மின் இதழ்
பதிப்பு - 14, காந்தி ஜெயந்தி
அன்று வெளியிடப்பட்டது

15
Edition

Matrimonial E.Magazine
released on English New Year
Date: 01.01.2025

திருமண தகவல்
மின் இதழ் பதிப்பு - 15,
ஆங்கில புத்தாண்டு அன்று
வெளியிடப்பட்டது.







16
Edition

Matrimonial E.Magazine
released on Date: 18.04.2025

திருமண தகவல்
மின் இதழ் பதிப்பு - 16,
ஏப்ரல் 18 ஆம் தேதி அன்று
வெளியிடப்பட்டது.

17
Edition

**Matrimonial E.Magazine released on**

**Date: 02.07.2025**

திருமண தகவல் மின் இதழ் பதிப்பு - 17, ஜூலை 2 ஆம் தேதி அன்று வெளியிடப்பட்டது.







18
Edition


**Matrimonial E.Magazine released on**

**Date: 17.10.2025**

திருமண தகவல் மின் இதழ் பதிப்பு - 18,
அக்டோபர் 17ஆம் தேதி அன்று வெளியிடப்பட்டது.

இராஜ்புத் பொந்தில் திருமண வரன் சேவை தொய்வின்றி மேலும் சிறப்புடன் தொடர்ந்து நடைபெற, அதன் மூலம் இராஜ்புத் பொந்தில் சொந்தங்கள் பயன் பெற, தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சமுதாய நல அறக்கட்டளைக்கு உங்களால் இயன்ற திருமண வரன் சேவை வளர்ச்சி நிதி வழங்க வேண்டும் என சொந்தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். - நிர்வாக குழு

TNRBC WT




வெளிப்படையான வரன் சேவையை உறுதி படுத்தும் வண்ணம், தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் திருமண வரன் பதிவு கொள்கை 01.01.2025 அன்று வெளியிடப்பட்டது.

**To ensure transparent Matrimonial Services,**
**TNRBA released Matrimonial Policy on 01.01.2025**

(Reg.No 10/2019)

# TAMIL NADU RAJPUT BONDIL ASSOCIATION

## MATRIMONIAL REGISTRATION FORM

Note: Please attach the recent Photographs of Bride / Bridegroom along with this registration form.
Horoscope is not compulsory.

MM -

1. Name / பெயர் : ____________

2. DOB / பிறந்த தேதி : ____________
3. Birth Time / பிறந்த நேரம் : ____________
4. Place of Birdh / பிறந்த இடம் : ____________
5. Place of Living / வசிக்கும் இடம் : ____________
6. Raasi / ராசி : ____________
7. Star / நட்சத்திரம் : ____________
8. Lagnam / லக்னம் : ____________
9. Gothram / கோத்ரம் : ____________
10. Height & Weight / உயரம்/எடை : ____________
11. Complexion / நிறம் : ____________
12. Qualification / கல்வி தகுதி : ____________
13. Occupation / தொழில் : ____________
14. Place of Service / தொழில் புரியும் இடம் : ____________
15. Salary/Month (Rs.) / மாத வருமானம் : ____________
16. Father's Name / தந்தையார் பெயர் : ____________
17. Mother's Name / தாயார் பெயர் : ____________
18. Father's Occupation / தந்தை தொழில் : ____________
19. Mother's Occupation / தாயாரின் தொழில் : ____________
20. Siblings / உடன் பிறந்தோர் : ____________
21. Address / விலாசம் : ____________
22. Other Details / இதர விபரங்கள் : ____________
23. Contact Number / தொடர்பு எண்கள் : ____________
24. E-mail / மின்னஞ்சல் முகவரி : ____________

**Matrimonial E.Magazine Service Development Donations are accepted.**
திருமண தகவல் மின் இதழ் சேவை வளர்ச்சி நிதி வரவேற்கப்படுகின்றன
Tamil Nadu Rajput Bondil Community Welfare Trust (Reg. No: 242 / 2021)
ICICI Bank A/C No :743505000254

Scan for TNRBC WT

வரன் தேடுபவர்களுக்கு உதவுவதற்காக பயோடேட்டா தரப்படுத்தப்பட்டு, தேவையான உள்ளீடுகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**To help the matrimonial seekers, biodata has been standardized and the required inputs are mentioned in both Tamil and English language.**




## FREE KALYANA KENDRA

Free Kalyana Kendra conducted at Hosur on 30.07.2023 during the Family Meet Gathering Function.

30.07.2023 அன்று ஓசூரில் நடைபெற்ற குடும்ப விழாவில், இலவச கல்யாண கேந்திரா நிகழ்ச்சி நடைபெற்றது..





## FREE KALYANA KENDRA

Free Kalyana Kendra conducted at Hosur during Family Meet Gathering Function on 18.08.2024.

18.08.2024 அன்று ஓசூரில் நடைபெற்ற குடும்ப விழாவில் இலவச கல்யாண கேந்திரா நிகழ்ச்சி நடைபெற்றது.



ௐ

தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்

தலைமையகம் : ஓசூர்

மதுரை மாவட்ட வாடிப்பட்டி கிளை ஆண்டு விழா அழைப்பிதழ்

அன்புச் சொந்தங்களுக்கு வணக்கம்!

வரும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை மாதம் 27 - ஆம் தேதி (10-05-2024) வெள்ளிக்கிழமை அன்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ துல்ஜா பவானி பூஜை சிறப்பாக நடைபெற உள்ளது. அதுசமயம் T.N.R.B.A. மதுரை மாவட்ட ஆண்டு விழா மாநிலத் தலைவர் உயர்திரு. டாக்டர். G.பவானிசிங் அவர்கள் தலைமையில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து அம்மன் அருள்பெற்று விழாவினைச் சிறப்பித்துத் தருமாறு விழாக் குழுவினர் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**ஆண்டு விழா நிகழ்ச்சிகள்**

நாள் : 10-05-2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி

இடம் : ஸ்ரீ கிருஷ்ணா மஹால், T.வாடிப்பட்டி

வரவேற்புரை : திரு.M.லோகேஷ் B.Com.,(C.A.) அவர்கள்,

தலைமை : திரு.S.ஹரிதேவ்சிங் அவர்கள், மதுரை மாவட்ட தலைவர்

முன்னிலை : திரு.K.G.சேகர்சிங் அவர்கள், மதுரை மாவட்ட செயலாளர்

வாழ்த்துரை : திரு.Dr.B.K.C.மோகன்பிரசாத் அவர்கள், மோகன் மெடிசிட்டி மருத்துவமனை, மதுரை

திரு.J.பிரகாஷ்ராஜ்சிங் அவர்கள், மாநில பொதுச் செயலாளர், சென்னை

திரு. B.கஜேந்தர்சிங் அவர்கள், மாநில துணைத் தலைவர், ஓசூர்

சிறப்புரை : சமூக காவலர் திருமிகு. Dr.G.பவானிசிங் அவர்கள், மாநிலத் தலைவர், ஓசூர்

மற்றும் மாநில, அனைத்து மாவட்ட நிர்வாகிகள், மகளிரணி, இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

நன்றியுரை : திரு.J.பிரேம்நாத்சிங் அவர்கள், T.வாடிப்பட்டி

**மதிய உணவுக்குப் பின் மாலை 03.00 மணியளவில் இலவச கல்யாண கேந்திரா நடை பெற உள்ளது.**

கல்யாண கேந்திரா :

T.N.R.B.A. மதுரை மாவட்டம், வாடிப்பட்டி கிளை சார்பில் திரு.B.மதன்சிங் EB, திரு.B.பாரத்சிங் பரவை, திரு.பிரேம்நாத்சிங், திரு.M.முருகன்ஜி, திரு.K.பாஸ்கர்சிங் ஆகியோர் பதிவு ஏற்பாடுகள் செய்து விழாவினை நடத்திட உள்ளார்கள். இந்நிகழ்ச்சியை நமது உறவுகள் அனைவரும் பயன்படுத்தி பயன்பெறுமாறு விழாக் குழுவினர் சார்பாக வேண்டுகிறோம்.

இவண்

விழாக் குழுவினர்

T.N.R.B.A.

T.வாடிப்பட்டி கிளை

## FREE KALYANA KENDRA

Free Kalyana Kendra conducted at Madurai District, Vadipatti on Date: 10.05.2024.

10.05.2024 அன்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் இலவச கல்யாண கேந்திரா நிகழ்ச்சி நடைபெற்றது.







## FREE KALYANA KENDRA

Free Kalyana Kendra conducted at Hosur on 27.07.2025 during the Family Meet Gathering Function.

27.07.2025 அன்று ஓசூரில் நடைபெற்ற குடும்ப விழாவில், இலவச கல்யாண கேந்திரா நிகழ்ச்சி நடைபெற்றது..



மகளிரணி நிர்வாகிகள் மணமகளை (நடுவில் இருப்பவர்) அறிமுகம் செய்தார்கள்.



## TAMIL NADU RAJPUT BONDIL COMMUNITY WELFARE TRUST (Reg.No: 242/2021)

### Lakshya 20 L ...

is a short term mission started to attract funds for our Tamil Nadu Rajput Bondil Community Welfare Trust headed by Dr.G.Bhavani Singh.

The funds collected in the mission will be deposited in Trust Fixed Deposit Scheme. Once we achieved the target of 20 Lakhs, the annual interest getting from the investment, will be utilized for supporting our Tamil Nadu Rajput Bondil Community Members.

Please contribute Monthly, Quarterly, Half yearly, Annually or whenever possible to strengthen our Trust. Let us join in the Lakshya 20L mission and achieve our target as early as possible.

ICICI Bank A/C No: 743505000254
Branch: Manapakkam, Chennai
IFSC Code: ICIC0007435

Donations are exempted under 80G of IT act 1961.

| Dr.G.Bhavani Singh | J.Prakash Singh | K.Balaji Singh |
|---|---|---|
| President | Secretary | Treasurer |

# திருமண வாழ்த்துக்கள் - வாழ்க மணமக்கள்




Best Wishes for the Happy Married Life

Selvan.K.Balaji weds Selvi.Karthiga

Date: 27.08.2025, Place: Tirunelveli



# வரன் தேடும் சொந்தங்கள் சிந்திக்க! தெளிவு பெற!! செயலாக்கம் பெற !!!

வரன் தேடும் சொந்தங்களுக்கு வணக்கம்.
Warm Greetings to all Tamil Nadu Rajput Bondilis.

இந்த பதிவு...
சிந்திக்க ! தெளிவு பெற !
செயலாக்கம் பெற !
வாழ்வில் பொன் வசந்தம் வீச !

This post is ...to think !
to clarify ! to act ! May the golden spring of life bloom !

ஒளிவு மறைவற்ற வரன் சேவைகள் வழங்கவும், வரன் சேவை செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும், வரன் தகவல்களை சொந்தங்களுக்கு விரைவாகவும், சீராக வழங்கவும் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் தலைமை சங்கத்தின் சார்பாக திருமண வரன் கொள்கைகள் வகுக்கப்பட்டு திருமண வரன் தகவல் மின் இதழ் கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு மேலாக வெளியிடப்பட்டு வருகிறது.

In order to provide transparent matrimonial services, regulate matrimonial service activities, and provide matrimonial information to the relatives quickly and smoothly, the Tamil Nadu Rajput Bondil Association has formulated Matrimonial policies and publishing the Matrimonial Information e-Magazine over four and a half years.

திருமண வரன் தகவல் மின் இதழ் மூலம் நூற்றுக்கு மேற்ப்பட்ட திருமணங்கள் நடந்தேறி பல குடும்பங்களில் மகிழ்ச்சி தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளது. நம் பயணம் மேலும் சிறப்புடன் தொடரும், சொந்தங்களுக்கு அதிக அளவில் பயனளிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

Hundres of weddings have taken place through the Matrimonial Information e-Magazine and the lamps of happiness have been lit in many families. There is no doubt that our journey will continue with more excellence and will benefit our relatives to a greater extent.

திருமணம், இரு மனம் இணையும் சங்கம திருவிழா !
ஆயிரம் காலத்து பயிர் !
என்று பெரியோர்கள் கூறுவார்கள்.
இரு குடும்பங்கள், அவர்களை சார்ந்த சொந்த பந்தங்களையும் புதிதாக நம்மோடு இணைக்கும் மகிழ்வான புதிய தொடக்கம் அது.

Marriage, the festival of the confluence of two hearts ! Elders would say that it is a crop of 1,000 seasons !! It is a joyful new beginning that reconnects two families and their personal ties with us.

இன்றைய கால மாற்றத்தில் நாம் பெற்றுள்ள தொழில் நுட்ப வசதி வாய்ப்புக்கள், நம் செயல்களை மிக எளிதாக்கி நமக்கு எந்த அளவு பயனளிக்கிறதோ, அதே அளவுக்கு உறவுகளுக்குள் பரஸ்பர நெருக்கம் குறையவும் காரணமாகி விடுகிறது. அதன் காரணமாக ஏற்படும் இடைவெளியானது மனித மனங்களின் புரிதல்களை அறிந்து கொள்வதில் தவறிழைத்து விடுகிறது. இதன் காரணமாக ஏற்படும் கருத்து வேற்றுமைகள் முற்றி, இறுதியில் பல்வேறு உறவுகள் விரிசலுக்கு உள்ளாகி உடைந்து, தீராத விலகலுக்கு வித்திட்டு விடுகிறது.

The technological opportunities we have gained in today's changing times, while making our activities much easier and beneficial to us, are also causing a decrease in mutual intimacy within relationships.
The resulting gap makes it difficult to understand the understandings of human minds.

The differences of opinion that arise from this misunderstanding are endless. Ultimately, various relationships are cracked and broken, It leads to endless separation.

இதற்கான அடிப்படை காரணங்கள் மற்றும் இதுபோன்ற சூழல் ஏற்படாமல் செய்ய நாம் தவிர்க்க வேண்டிய விஷயங்களாக சில.... அனுபவத்தில் பெரியோர்கள் கருதுவது !

Here are some of the basic reasons for this and the things we should avoid to prevent such a situation from happening....
What our elders think from experience!

1).தொடர்பு குறைபாடு

(Communication gap),

2).அதிகரித்த எதிர்பார்ப்புகள்

(High expectations),

3).குடும்பத்தாரின் தலையீடு

(Family members interferences),

4).பொருளாதாரம் போன்ற காரணங்களால் ஏற்படும் வேறுபாடுகள்

(Financial status difference),

5).தனிப்பட்ட மற்றும் சமூக காரணங்கள் பிற வேறுபாடுகள்:

(Personal and social reasons Other differences)

6).திருமணத்திற்கு முந்தைய உடல், மனநலப் பிரச்சினைகள்

(Physical and mental health problems)

7).ஜோதிடக் காரணங்கள்

(Astrological reasons)

ஆகியவைகள் காரணகர்த்தியாக இருப்பதாக தெரிகிறது. அவைகள் சற்று விரிவாக...
These seem to be the reasons. They are a bit more detailed...

1).தொடர்பு குறைபாடு

(Communication gap):-

சம்பந்தம் பேசுபவர்கள் தெளிவான மற்றும் திறந்த மனதுடன் பேசிக்கொள்ளாமல் இருப்பது சிக்கல்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது. வாட்ஸப், வீடியோக்கள் மூலமாகவே தொடர்பு, பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு பின்னர் நேரில் சந்தித்து பேசுகையில் பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்து விடுகிறது.

The root cause of problems is the lack of clarity and openness among stakeholders. Communication and negotiation through WhatsApp and Videos and then meeting in person, leads to many problems.

2).அதிகரித்த எதிர்பார்ப்புகள்

(High expectations):-

மண வாழ்வில் இணைபவர்கள் அல்லது பெற்றோர்களுடைய எதிர்பார்ப்புகள் அதிகமாக இருப்பது திருமணத்தை தள்ளிப்போட அல்லது முறிவடையச் செய்ய ஒரு காரணமாகிறது.

High expectations from the partners or from parents can be a reason for postponing or breaking up a marriage.

3).குடும்பத்தாரின் தலையீடு

(Family members interferences):-

திருமண நிச்சயதார்த்தம் முதல் திருமணம் வரை, அனைத்து விஷயங்களிலும் இரு குடும்பத்தினருக்கும் இடையிலான ஏற்படுகின்ற சிறு சிறு கருத்து வேறுபாடுகள் பெரிதாகி பிரச்சினைகளுக்கு வழிவகுக்குகிறது. எனவே சிறுசிறு பிரச்சனைகளை உடனுக்குடன் பேசி பரஸ்பரம் விட்டுகொடுத்து தீர்வுகண்டு விடுங்கள்! மனதில் அமுத்திவைப்பதால் விஸ்வரூபம் எடுக்கும்! பொருமைசாலியான பெரியோர்களை உடன் அழைத்து செல்லுங்கள்,

விரிசல்கள் ஏற்படாத வார்த்தைகளால் பாலமாக இருந்து உறவுகளை பலப்படுத்துவார்கள்!

From engagement to marriage, minor disagreements between the two families can escalate into problems. So, talk about minor problems immediately, compromise, and find a solution! Keeping it in mind will make the problem more complicate. For marriage talks take seniors along with you, their matured talks may avoid the unwanted conversation and bridge the relationship.

4).பொருளாதாரம் போன்ற காரணங்களால் ஏற்படும் வேறுபாடுகள்

(Financial status difference),

பெற்றோரின் பொருளாதார வேறுபாடுகள் மற்றும் எதிர்பார்ப்புகள், எதிர்கால நிதிச் சுமைகள் அல்லது வாழ்க்கை முறை சரிசெய்தல் பற்றிய கவலைகளை அறிமுகப் படுத்துவதன் மூலம் திருமணப் பேச்சுவார்த்தைகளை தடை செய்கிறது.
நல்ல மனங்களுக்கிடையே ஒன்றுபட்டு உழைத்தால் எதிர்காலத்தில் பொருளாதாரம் மேம்படும்.

Parents' economic differences and expectations about future financial burdens or lifestyle adjustments hinder marriage negotiations and prohibits negotiations. If good minds work together, the economy will improve in the future!

5).தனிப்பட்ட மற்றும் சமூக காரணங்கள் பிற வேறுபாடுகள்

(Personal and social reasons Other differences):

திருமணத்திற்கு முன் படிப்பு, வேலை, சம்பளம், அழகு, உயரம் போன்ற விஷயங்களில் உள்ள வேறுபாடுகள் திருமணத்தை முறிக்க வழி வகுக்குகிறது. ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கை மிக முக்கியம். வெளிப்படையாக பேசி தெளிவு பெறுங்கள்.

Before marriage differences in things like education, job, salary, beauty and height lead to the breakup of a marriage talks. Mutual trust is very important. Be open and honest.

6).உடல் மற்றும் மனநலப் பிரச்சினைகள்:

(Physical and mental health problems):-

மணமக்களின் உடல் அல்லது மனநலப் பிரச்சினைகள், மற்றும் இது தொடர்பான வெளிப்படையான பேச்சின்மை, திருமண பேச்சில் சிக்கல்களை ஏற்படுத்துகிறது. அனுபவமுள்ள நடுநிலையான பெரியோரிடம் ஆலோசனை கேளுங்கள் தெளிவு பிறக்கும்.

Physical or Mental health issues in the bride and groom, and the apparent lack of communication related to this, cause problems in the wedding talks. Seek advice from experienced, neutral people and clarity will emerge.

### 7).ஜோதிடக் காரணங்கள் (Astrological reasons):-

சில நேரங்களில் ஜோதிட தகவல்கள் திருமணத்திற்குத் தடையாக அமையலாம். உங்கள் மன நம்பிக்கை அடிப்படையில் தேர்வு செய்யவும்.

Sometimes astrological information can be an obstacle to marriage. Choose based on your beliefs.

எனவே மேற்குறிப்பிட்ட விசயங்களில் கவனம் செலுத்துவது...மன வேதனை, மனஸ்தாபம், பொருளாதார பாதிப்பு, கால விரயம் போன்றவைகளை திருமண பேச்சுவார்த்தையின் போதும் திருமணத்திற்கு பிறகும் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்க உதவலாம்.

Therefore, paying attention to the above mentioned points can help to avoid emotional pain, regret, financial loss, and waste of time during marriage negotiations.

நமது சமுதாய திருமண வரன் சேவைகளை வெற்றிகரமாக்கி, சொந்தங்கள் அதிக அளவில் பயன் பெற செய்ய வைப்பது நம் அனைவருடைய சமுதாய கடமையாகும்.

It is the social duty of all of us to make our community's matrimonial services successful and to ensure that our community benefit as much as possible.

வாருங்கள்... ஒருங்கிணைந்து செயல்படுவோம், வெற்றி பெறுவோம்.

Come on... let's work together and win.

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் திருமண வரன் தகவல் நிர்வாக குழு (TNRBA Matrimonial Information Executive Team)

# திருமண வாழ்த்துக்கள் - வாழ்க மணமக்கள்



Best Wishes for the Happy Married Life
Selvan.N.Karthik Singh weds Selvi.B.Prithinka Bai
Date:19.08.2025
Place: Vellore

Best Wishes for the Happy Married Life
Selvan.A.Abishek Singh weds Selvi.R.Kajol Bai
Date: 20.08.2025
Place: Krishnagiri





Best Wishes for the Happy Married Life
Selvan.A.Chetan Singh weds Selvi.S.Prithisha Singh
Date: 20.08.2025
Place: Krishnagiri

## தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சமுதாய நல அறக்கட்டளை
## (பதிவு எண்: 242/2021)

### லக்ஷ்யா 20 L...

என்பது, டாக்டர்.G.பவானி சிங் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சமுதாய நல அறக்கட்டளைக்கு நிதி ஈர்ப்பதற்காக தொடங்கப்பட்ட குறுகிய கால திட்டமாகும்.

இந்த திட்டத்தின் மூலம் வசூலாகும் நிதிகளை அறக்கட்டளை வங்கியில் நிலையான வைப்புத் தொகை திட்டத்தில் முதலீடு செய்யப்படும்.
20 லட்சம் என்ற இலக்கை அடைந்தவுடன், முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருடாந்திர வட்டி மூலம் நமது தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சமுதாய உறுப்பினர்களின் நலவுதவி திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்.

நமது சமுதாய நல அறக்கட்டளையை வலுப்படுத்த நன்கொடைகளை மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு தவணையாகவோ, ஆண்டு தவணையாகவோ அல்லது முடியும் போதெல்லாம் கொடுத்து உதவலாம்.

ICICI வங்கி கணக்கு எண்: 743505000254
வங்கி கிளை: மணப்பாக்கம், சென்னை
IFSC குறியீடு : ICIC0007435

நன்கொடைகளுக்கு 80G IT சட்டம் 1961ன் கீழ் வரி விலக்கு அளிக்கப்படுகிறது. வாருங்கள்.. லக்ஷ்யா 20L திட்டத்தில் இணைந்து, நமது இலக்கை இயன்ற வரை விரைவில் எட்டுவோம்.

| | | |
|---|---|---|
| டாக்டர்.G.பவானி சிங் | J.பிரகாஷ் சிங் | K.பாலாஜி சிங் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

# இராஜ்புத் பொந்தில் திருமண சடங்கு முறைகள்
# Rajput Bondil Wedding Rituals




திருமண சடங்கு முறைகளை அறிந்துகொள்வதன் முக்கிய பயன், அது திருமணத்தின் நோக்கத்தையும், திருமணம் புனிதமான ஒன்றாகக் கருதப்படுவதையும் விளக்குகிறது.

The main benefit of understanding wedding rituals is that it explains the purpose of marriage and why marriage is considered sacred.

மேலும், சடங்குகளின் மூலம் இரு குடும்பங்களும் முறையாக இணைவதற்கும், எதிர்கால வாழ்க்கைக்கான ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கும் உதவுகிறது.

Furthermore, the rituals help both families to formally unite and receive blessings for the future life.

சடங்குகள் மணமக்களுக்கு பல நல்ல அர்த்தங்களை உணர்த்துவதோடு, சமூக ரீதியான உறவுகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றன.

The rituals convey many positive meanings to the bride and groom and emphasize the importance of social relationships.

# இராஜ்புத் பொந்தில் திருமண சடங்கு முறைகள்
# Rajput Bondil Wedding Rituals

எனவே இராஜ்புத் பொந்தில் திருமண சடங்கு முறைகளை சொந்தங்கள் அனைவரும் முறையாக கடைபிடிக்க திருமண சடங்கு முறைகளை தொகுத்து அவற்றை திருமண வரன் தகவல் மின் இதழில் வழங்கி வந்தோம்.

**Therefore, we have compiled the wedding rituals and provided them in the Matrimonial Information e-magazine so that all the Rajput Bondil relatives can properly observe the wedding rituals.**

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கம், இராஜ்புத் பொந்தில் திருமண சடங்கு முறைகளை ஆவணப்படுத்தி அவற்றை புத்தகமாக வெளியிட்டுள்ளது.

**The Tamil Nadu Rajput Bondil Association has documented the Rajput Bondil marriage rituals and published them in as E.book. (Doc.No.TNRBA/2025/MM/002, Dated 15.04.2025).**

தேவைப்படும் சொந்தங்கள் மின் இதழ் நிர்வாக குழுவை அணுகி வாட்ஸப் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**Those who need it can contact the Matrimonial Information e-magazine management team and obtain it through WhatsApp.**




## TNRBA Matrimonial

Registration Free

Matrimonial E.Magazine is published once in every three months

Fill the Matrimonial Registration Form and send us along with the recent Photographs

Come on.. let's join hands together for the development of Rajput Bondil community



# TAMIL NADU RAJPUT BONDIL COMMUNITY WELFARE TRUST (Reg.No: 242/2021)

ICICI Bank

eazypay

## Scan QR Code

Merchant Name: TAMILNADU RAJPUT BONDIL COMMUNITY WELFARE TRUST

VPA ID : TNRBCW@icici

You can pay donations directly to the Trust Bank account by scanning the above QR Code.

Donations are exempted under 80G of IT act 1961

# திருமண வாழ்த்துக்கள் - வாழ்க மணமக்கள்



Congratulations
for the Marriage Engagement
Selvi.J.R.Keerthi with
Selvan.D.Vishal
Date: 07.09.2025
Place: Salem

Best Wishes for the Happy Married Life
Selvan.B.Pavan Singh weds
Selvi.P.Shivaranjini
Date: 13.09.2025
Place: Chennai





Best Wishes for the Happy Married Life
Selvan.B.Praveen Kumar Singh
Weds Selvi.G.Rekha Singh
Date: 23.10.2025
Place: Chennai

# திருமண வரன் சேவை மையத்தின் செயல்பாடுகள் பற்றிய கருத்துகள் - 1

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் சார்பாக நடத்தி வரும்

திருமண வரன் சேவை மையத்தில் (MATRIMONIAL SERVICE CENTER) பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை ஆயிரம் கடந்து விட்டது என்பது சாதனையானதும், மகிழ்ச்சியானதும் ஆகும் .

இச்சாதனை படைத்த திருமண வரன் தகவல் நிர்வாக குழுவினருக்கு பெருமைக்குரிய பாராட்டுதல்கள்.

ஊதியம் இல்லாமல் சுயநலம் இல்லாமல் பொது நலமாக செயல்படும் குழுவினருக்கு நன்றிகள் பற் பல !

மின்னிதழ் தயாரிப்புக்கு ஆண்டு கட்டணங்கள் செலுத்தி உரிமம் பெற்ற மைக்ரோசாப்டும், புகைப்படங்கள் எடிட் செய்வதற்கு கட்டண மென்பொருளும் (SOFTWARE) பயன்படுத்தப்படுகின்றன.

வரன் சேவையின் வளர்ச்சிக்கான இந்த செலவுகள் யாவும் அறக்கட்டளைக்கு கிடைக்கும் நன்கொடைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

வரன் சேவையால் பயன் அடையும் நாமும், நம்மால் இயன்ற நன்கொடையை வரன் சேவையின் வளர்ச்சிக்கு கிடைத்திட வழி வகுப்போமாக !

அந்த உதவி திருமண வரன் தகவல் நிர்வாக குழுவிற்கு ஏற்படும் நிதி சுமையை குறைக்க ஏதுவாக இருக்கும். மேலும் சங்கம் வளர்ச்சி பாதையை நோக்கி வேகமாக முன்னேறவும் உறுதுணையாக இருக்கும்.

இலவசமாக சேவை செய்வது சங்கத்தின் உயர்ந்த எண்ணமாக இருந்தாலும் நாமும் நம்மால் இயன்ற அளவில் உதவி செய்து அறக்கட்டளையின் நிதி ஆதாரத்தை பெருக்க துணை நிற்போமாக !

நமது சமுதாய மக்களுக்காக செயல்படும் TNRBA சங்கத்திற்க்கு நம்மால் இயன்றதை கொடுத்து சிறப்பிப்போம்.

சங்கத்தின் நற்செயல்கள் அனைத்திற்கும் நாம் பக்கபலமாக இருந்து முன்னேறுவோமாக !

# திருமண வரன் சேவை மையத்தின் செயல்பாடுகள் பற்றிய கருத்துகள் - 1

மாநில தலைவர் Dr.G. பவானி சிங் அவர்களுக்கும், மின்னிதழ் நிர்வாக இயக்குநரும், மாநில பொது செயலாளருமான திரு.J. பிரகாஷ் சிங் அவர்களுக்கும், மின்னிதழ் தயாரிப்பிற்கு உதவி வரும் அனைவருக்கும் நன்றி.

TNRBA - செய்தி மடலின் 14 ஆம் பதிப்பு சிறப்படைய வாழ்த்தி மகிழ்கிறேன். வாய்ப்புக்கு நன்றி !



B.K. பாலாஜி சிங் M A. B.Ed.,
வட சென்னை, திருவள்ளூர் ஒருங்கிணைந்த மாவட்ட செயலாளர்



உங்களுக்கு பொருத்தமான வரன்களை
TNRBA திருமண தகவல் சேவை மையம்
மூலம் தேர்ந்தெடுங்கள்.

வரன் பதிவு இலவசம்

வரன் பற்றிய தகவல்கள் அடங்கிய மின் இதழ் மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும்.

TNRBA திருமண வரன் பதிவு படிவத்தை பூர்த்தி செய்து, புகைப்படத்துடன் அனுப்பி வையுங்கள்.

வாருங்கள்... இராஜபுத்திர பொந்தில் சமுதாய வளர்ச்சிக்கு கைகோர்ப்போம்.

# திருமண வாழ்த்துக்கள் - வாழ்க மணமக்கள்



Best Wishes for the Happy Married Life

Selvan.R.Ubendar Singh Weds Selvi.N.Deepa

Date: 27.10.2025

Place: Chennai

Congratulations for the Marriage Engagement

Selvan.B.JaiNarayan Singh, weds Selvi.H.Mithra Singh

Date:31.10.2025

Place: Tiruttani





Best Wishes for the Happy Married Life

Selvi. N.Surya Prabha weds Selvan.R.Suresh Krishnan

Date: 09.11.2025,

Place: Coimbatore

# திருமண வரன் சேவை மையத்தின் செயல்பாடுகள் பற்றிய கருத்துகள் - 2

திருமண வரன் சேவை மையத்தின் வளர்ச்சி பாதை 14 வது சிறப்பு பதிப்பாக வெளிவந்ததை காணும்போது மிக பிரமிப்பாக உள்ளது!

ஆயிரம் வரன்கள் தகவலை பதிவுசெய்து சொந்தங்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்கள் இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டு வரன் தகவலை டிஜிட்டல் முறையில் கைபேசியில் பார்த்தபடியே வரன்களை மணமக்களாக மாற்றும் மேஜிக்கை செய்து கொண்டுள்ளது TNRBA.

எந்த சிரமமும் இல்லாமல் எத்தனையோ குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

எங்கேங்கோ இருக்கும் சொந்தங்கள் அனைவரையும் இணைக்கும் பாலமாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை புதிய வரன் தகவல்களை திரட்டி, தொகுத்து வரன் பதிப்பை வெளியிட்டு பயனுள்ள ஆக்கபூர்வமான பணியை திறம்பட தொடர்ந்து இன்று ஆயிரம் வரன்களை கண்டடைந்து வளர்ச்சிப் பாதையில் பயணிப்பது TNRBA மீது சொந்தங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு ஆதாரமாகிறது!

இது TNRBA நிர்வாகிகள் அனைவருமே பெருமை கொள்ளும் விஷயமாகும்!

ஒருஅமைப்பின் சேவை அதை நம்பும் மக்களுக்கு தேவைப்படும் போது பெரிய கஷ்டமான விஷயங்களை சிரமமின்றி அவர்களுக்கு எளிதாக கிடைக்க செய்வதில் தான் உள்ளது! அதற்கான பணிகளில் சொந்தங்களின் தொடர்புகளை நெட்ஓர்காக கொண்டு அனைத்து மாவட்ட நிர்வாகிகளை ஒருங்கிணைத்து வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் TNRBA அமைப்பின் வளர்ச்சி இதுபோன்ற ஆயிரம் வரன்கள் என்ற, மைல் கற்களை கடக்கும் போது தான் தெரியவருகிறது

ஒற்றையடிப்பாதையில் தொடங்கிய வரன் சேவை பயணம் இன்று பரந்து விரிந்த தேசிய நெடுஞ்சாலை போல பல மாநிலங்களை இணைத்து சிறப்புடன் சென்றடைந்துள்ளது என்பது மகிழ்சியான விஷயமாகும்!

இந்த பாதையும் பயணமும் பல எல்லைகளை கண்டடைந்து அனைத்து சொந்தங்களையும் ஒருங்கிணைத்து மேன்மேலும்

# திருமண வரன் சேவை மையத்தின் செயல்பாடுகள் பற்றிய கருத்துகள் - 2

பயனடையச் செய்யும் என்ற நம்பிக்கையும் நமக்குள் வளர்கிறது!

இவற்றை சாதிக்க களம் அமைத்து அச்சாணியாய் சுழலும் TNRBA வின் நம் மாநில தலைவர் டாக்டர் திரு.G.பவானிசிங் அவர்களின் வருடாந்திர ஒசூர் பொது குழு கூட்டமும், அதில் நடத்தும் கல்யாண கேந்திராவும் பெரும் பங்கு வகிக்கின்றது!

அந்தநிகழ்வை சிறப்புற நடத்தும் நிர்வாகிகளின் செயல்திறனும் உழைப்பும் பங்களிப்பும் பாராட்டுக்குறியது!

அங்கு கிடைக்கப்பெற்ற தகவல்களை திரட்டி பரிசீலித்து ,பிழை நீக்கி, சரிசெய்து தேர்ந்த புத்தகமாக தொகுத்து வடிவமைத்து டிஜிட்டல் தரவுகளாக மெருகேற்றி நம் கைபேசிக்கு கடத்தும் ஆச்சரியத்தை அளிப்பவர் நமது கர்மவீரர் மாநில பொது செயளாலர் திரு.J.பிரகாஷ் சிங் அவர்களின் அசுர உழைப்பிற்கு ஈடு இணையாக பாராட்ட வார்தையில்லை! வரன்சேவை பயனாளிகளின் வாழ்த்துக்களே அவருக்கு பாராட்டு மாலைகளாகும்!

TNRBA அனைத்து குடும்பங்களுக்கும் இந்த சேவை மூலம் சென்றடைந்துள்ளது என்பதில் நிர்வாகிகள் அனைவருமே பெருமை கொள்ளலாம்!

தொடர்ந்து இதே ஒற்றுமையுடன் வளர்ச்சியை நோக்கி பயணிப்போம்! வரும்காலத்தில் புதிய எல்லைகளை கடந்து மேன்மேலும் புதிய சொந்தங்களை சென்றடைந்து இணைந்து பயனடைவோம்!
என்ற உறுதியுடன் இச்சாதனை பயணத்தில் உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி கூறி பாராட்டி மகிழ்ந்து பெருமை கொள்கிறோம் !

நன்றிகள்.




N.பிரேமானந்தசிங் @ பாலா
திருநெல்வேலி - தென்காசி மாவட்ட தலைவர்

# திருமண வாழ்த்துக்கள் - வாழ்க மணமக்கள்



Best Wishes for the Happy Married Life
Selvan.Er.R.Sandeep Ashish Singh weds
Selvi.Dr.V.Meena Kumari
Date: 10.11.2025
Place: Chennai

Congratulations
for the Marriage Engagement
Selvan.Krison Ramkumar Lal
with
Selvi.A.Sowmya @ Sumathi
Date: 16.11.2025
Place: Tiruppur





Best Wishes for the Happy Married Life
Selvan.A.Sanjay weds
Selvi.J.Senbakavalli
Date: 23.11.2025,
Place: Ambasamudiram

# திருமண வரன் சேவை மையத்தின் செயல்பாடுகள் பற்றிய கருத்துகள் - 3

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கம் மாவீரன் இராஜா தேசிங்கின் வம்சத்தின் அடையாளமாக திகழ்கின்றது.

நம் இனமக்கள்...
எங்கு வாழ்கின்றனர் ?
எப்படி வாழ்கின்றனர் ? என அறியாத நிலையைப் போக்கி அனைவரும் அறியும் வகையில் ஒருங்கிணைத்த நமது மாநில தலைவர் டாக்டர் G. பவானி சிங், மாநில பொதுச்செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங், பொருளாளர் திரு.K.பாலாஜி சிங், மாநில கௌரவத் தலைவர் திரு.J.மோகன் சிங் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகளுடைய சீரிய செயல்பாடுகளால் நமது சங்கம் புத்துணர்வும், புதுப்பொழிவும் பெற்று அனைவரும் பாராட்டும் வகையில் முன்னேறி செல்கின்றது.

நம் சமுதாய மக்களை ஒன்றிணைத்து அடையாளப்படுத்த ஆண்டுதோறும் ஓசூரில் குடும்ப விழா, கல்வியில் சிறந்த நம் சமுதாய மாணவ மாணவியர்களுக்குப் பரிசுகள், பாராட்டுக்கள் மற்றும் ஊக்கத்தொகை வழங்கிச் சிறப்பித்தல், நிதி ஆதாரத்தை (லஷ்யா 20L) உருவாக்கி அதன் வாயிலாகக் கிடைக்கும் வட்டி வருவாயில் நம் சமுதாய மக்களுக்காக பல நலத் திட்டங்களுக்கு உதவுதல், அனைவரும் பயன்பெற கல்வி வேலை வாய்ப்புத் தகவல்கள் வழங்குதல் ஆகிய சிறந்த நற்பணிகளைத் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கம் சிறப்பாக இன்றளவும் வழங்கி வருகிறது.

நமது சங்கத்தின் மிக முக்கியமான பணியாகத் திருமண வயதை அடைந்தவர்களுக்குப் பெண் எங்கே இருக்கிறார்கள் ? அவர்களுக்கு இணையான மாப்பிள்ளை எங்கே இருக்கிறார்கள் ? என்ற விவரம் அறியாத நிலையைப் போக்கி, வரன் பற்றிய விவரங்களை அறியும் வகையில் திருமண வரன் பற்றிய தகவல்களை மின் இதழ் வாயிலாக வெளியிடப்பட்டு வருகிறது. தற்போது வரை ஆயிரம் வரன்களுக்கு மேல் பதிவிடப் பட்டுள்ளது மிகப்பெரிய சேவையாகும்.

இந்த திருமண மின் இதழ் வாயிலாக நம் சமுதாய மக்கள் பெருமளவில் பயனடைந்துள்ளனர். எந்த சுய இலாப நோக்கமின்றி, வரன் பற்றிய பதிவுகளுக்கு எந்த கட்டணமுமின்றி நம் சமுதாய மக்கள் இதனால் பயனடைந்தால் அதுவே சிறந்த சேவை என்ற உயரிய இலட்சியத்துடன் மின்இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இதற்காக உழைத்தவர்களை நாம் நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டும்.

# திருமண வரன் சேவை மையத்தின் செயல்பாடுகள் பற்றிய கருத்துகள் - 3

திருமண வரன் மின் இதழ் நம் சமுதாயத்திற்கான வரப்பிரசாதம். இந்தப் பணி மிகவும் வரவேற்கத்தக்கது.

இது மட்டுமின்றி நம் சமுதாய மக்களின் நலனில் அக்கறை கொண்டு நம் சமுதாயத் திருமணத்தை எவ்வாறு நடத்துவது என்பதை அறிய திருமணச் சடங்குகள் பற்றிய விவரங்களையும் மின் இதழ் வாயிலாக வெளியிடப்படுகிறது.

இந்த நற்செயல்களுக்கு நம் சமுதாய மக்கள் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்திற்கும், அறக்கட்டளைக்கும் பெருமளவில் தங்களால் இயன்ற நிதியுதவி வழங்கி உயரச்செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.



முனைவர் ரா.லட்சுமண சிங்
பேராசிரியர்,
கரூர் மாவட்ட தலைவர்



Find your suitable match in

**TNRBA Matrimonial**

Registration Free

Matrimonial E.Magazine is published once in every three months

Fill the Matrimonial Registration Form and send us along with the recent Photographs

Come on..let's join hands together for the development of Rajput Bondil community

# திருமண வாழ்த்துக்கள் - வாழ்க மணமக்கள்



Best Wishes for the Happy Married Life
Selvan.R.Hayakirish weds Selvi.Dr.P.Rushmitha
Date: 23.11.2025
Place: Gopichettipalayam

Best Wishes for the Happy Married Life
Selvan.E.Karthik Prasad weds Selvi.D.Nandini
Date: 24.11.2025
Place: Chennai





Best Wishes for the Happy Married Life
Selvan.S.Harikishen Singh weds Selvi.Padma Devi
Date: 27.11.2025,
Place: Uthangarai

# திருமண வரன் சேவை மையத்தின் செயல்பாடுகள் பற்றிய கருத்துகள் - 4

ஊருக்கு பாலம் கட்ட ஒரு கோடி கைகள் வேண்டும் !
உறவுக்கு பாலம் கட்ட ஒரு ஜோடி கைகள் போதும்!

மாநில தலைவர் மனித நேயமிக்க Dr.G.பவானி சிங்,
மாநில பொது செயலாளர் படைப்பாளி திரு.J.பிரகாஷ் சிங்
இவர்களது நல்லாசியுடன்....

வாழ்வு மூன்றெழுத்து - வாழ்விற்கு தேவையான பண்பு மூன்றெழுத்து - பண்பிலே பிறக்கும் அன்பு மூன்றெழுத்து - அன்பிலே சுரக்கும் காதல் மூன்றெழுத்து - காதல் விளைவிக்கும் வீரம் மூன்றெழுத்து - வீரம் சொல்லும் களம் மூன்றெழுத்து - களத்திலே பெறும் வெற்றி மூன்றெழுத்து - இல்வாழ்க்கையை தொடங்கும் மும்மாத இதழ் மூன்றெழுத்து.

நேரம் நமது செல்வமாய் - இரவு பகல் பாராது தொலைத்த தூக்கட்தின் நடுவில் வெற்றியுடன் வலம் வரும் 14 ஆம் பதிப்பு! எடுத்த பணியினை திட்டமிட்டு செய்து முடிக்க வேண்டிய பணிகளை சிந்தனையுடன் கலந்திட்டு சிறப்பாகவும், சிக்கனமாகவும் வெளி கொணர்ந்து, ஆயிரம் எண்ணிக்கையினை வெற்றி இலக்காக மலர்ந்துள்ள 14 ஆம் பதிப்பு !

அதன் மதிப்பு இன்று பல ஊர்கள், பிற மாநிலங்களை தாண்டி, ஏன்? கடல் கடந்தும் நூற்றுக்கு மேற்பட்ட குடும்ப உறவுகளை கல்யாண மாலையுடன் இணைத்து கொண்டாடி மகிழ்கிறது !

இந்த வெற்றி கனியை சுவைக்க, பட்ட இன்னல்கள், அடைந்த துயரங்கள் - சொல்ல முடியாத அத்தியாயங்களாகவே இருந்து செல்லட்டும் !

ஆனால் அன்று விதைத்த விதை - இன்று ஆலமரமாய் வளர்ந்து பல கிளைகளை வேரூன்ற செய்துள்ளது. அந்த ஒரு மன நிம்மதியுடன் - மலர உள்ள ஆங்கில புத்தாண்டின் தொடக்கத்தில் ஆயிரம் பூக்களும் மலர்ந்து, மணம் வீசி, இல்லற வாழ்க்கையை இனிதே தொடங்கிட வாழ்த்தி மகிழும்....



V.சுரேஷ் பாபு சிங்
கோவை மாவட்ட தலைவர்

# திருமண வாழ்த்துக்கள் - வாழ்க மணமக்கள்



Best Wishes for the Happy Married Life
Selvan.G.Umanath Singh weds Selvi.R.Gayathri
Date: 30.11.2025 , Place: Ambur



Best Wishes for the Happy Married Life
Selvan.R.Rishwanth weds Selvi.J.Tanikshaa
Date: 30.11.2025 , Place: Avinashi

# TIPS FOR CHOOSING THE RIGHT BRIDE / GROOM

1. Ascertain the willingness of Bride / Groom for Marriage.
2. Ensure they are physically and mentally fit for Marriage.
3. Do not hurry up or postpone seeking alliance.
4. Be clear as to your expectations. Avoid confusions.
5. Present the Bio-data neatly with all relevant details.
6. Never suppress any vital information.
7. Photos play a vital role. Give the Latest ones.
8. Accept Sub-sects. Enlarge your areas of choice.
9. Never get carried away by external personality or income etc.
10. Verify the genuineness of data carefully and tactfully.
11. Avoid being too Fast or too slow in decision making.
12. Be always courteous and prompt in your communication.
13. Provide contact number of person who can talk responsibly.
14. Perform the Engagement and Marriage well within limits and avoid wastages. Instead contribute for noble purposes.
15. Share the Marriage expenses if need be.
16. Don't worry too much over the delay. Do your Best. Be Positive !

***

# திருமண வாழ்த்துக்கள் - வாழ்க மணமக்கள்



Best Wishes for the Happy Married Life

Selvan.Deepak Kumar Singh weds Selvi.Nivetha Bai

Date: 30.11.2025

Place: Gopichettipalayam

Best Wishes for the Happy Married Life

Selvan.Rajasekar weds Selvi.Geetha Bai

Date: 01.12.2025

Place: Trichy





TAMIL NADU

RAJPUT BONDIL ASSOCIATION

(Reg. No 10 /2019)

இராஜ்புத் பொந்தில்

திருமண சடங்கு முறைகள்

Rajput Bondil Wedding Rituals

Document No: TNRBA/2025/MM/002

Issued on: 15.04.2025

Marriage rituals helps... couples to fulfill their life's purpose together by collectively pursuing the spiritual goals.



## E.Magazine Executive Team, would like to express heartfelt gratitude to the following members who provided the support and assistance to publish this TNRBA News Letter, Edition - 14

### Blessings & Moral Support



Dr.G.Bhavani Singh




### Initiative & Implementation



J.Prakash Singh

### Matrimonial Support



V.Ravichandar Singh

### Matrimonial & News Letter Support



N.Premanantha Singh

### News Letter Proof Checking Support



B.K.Balaji Singh

### News Letter Feedback Support



Dr.R.Lakshman Singh

*சுபம்*

### News Letter Feedback Support



V.Suresh Babu Singh